# ஆடிப்பாவை போல – அகப்புற அரசியல்

**முனைவர் ஆ. சந்திரன்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)
திருப்பத்தூர்

மலர்: 4

இதழ்: 3

மாதம்: ஜனவரி

வருடம்: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

சிறுகதை மற்றும் புதுக்கவிதைகள் போன்றே புதினம் அல்லது நாவல் என்ற பெயரில் அழைக்கப்படும் இலக்கிய வகைமையில் தொடர்ந்து பரிசோதனைப் பிரதிகள் வெளியாகிக் கொண்டுள்ளன. அப்படி வெளியாகியுள்ள பிரதிகளில் ஒன்றுதான் ஆடிப்பாவை போல என்ற நாவல். நாவலின் பெயரைக் கேட்டவுடனே தமிழ் இலக்கியப் பரிச்சயம் உள்ளவர்களின் மனம்

**"கையும் காலும் தூக்கத் தூக்கும்**
**ஆடிப் பாவை போல**
**மேவன செய்யும் தன்புதல்வன் தாய்க்கே"[1]**

என்ற சங்கப் பாடலினை நிச்சயமாக நினைவு கூறும். உடனே இது பண்டைத் தமிழரின் வாழ்வைப் பற்றிய சமீபத்திய வெளியீடுகளான நிலம்பூத்து மலர்ந்த நாள், வேள் பாரி முதலான நாவல்களின் வரிசையில் அடக்க முடியுமா என்றால் இல்லை. ஆனால் அதே நேரம் இதன் வடிவம் அல்லது உருவம் பண்டைய இலக்கிய மரபைக் கொண்டதாக உள்ளதை மறுப்பதற்கில்லை. அதாவது, தனிப்பாடல்கள் (சங்க இலக்கியங்கள்) தொடர்நிலைச் செய்யுள் (சிலப்பதிகாரம்) என்ற இரண்டு வடிவங்களின் பல அம்சங்களை இந்த நாவலில் பார்க்க முடிகின்றன.

## அகநானூற்றுச் சாயல்

அகம் x புறம் என்று இலக்கியத்தைப் பிரித்து அனுபவித்து மகிழ்ந்தவர்கள் நம்முன்னோர்கள். இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்னர் அமைந்திருந்த அகம் / புறம் என்ற வாழ்வின் எதிர்இணைவுகள் அதே பெயரில் அகம் / புறம் என்று மாறிமாறி இரண்டு எதிரெதிர் தனித்தனிக் கதைகளாக இந்த நாவலில் இடம்பெற்றுள்ளன. ஒன்று, மூன்று, ஐந்து, ஒன்பது, பதினொன்று, பதிமூன்று, பதினைந்து, பதினேழு, பத்தொன்பது என்ற எண்ணிட்ட இயல்கள் (கதைப்பகுதிகள்) காதல் கதைகளாய் (அகம் என்ற பெயரில்) அமைந்துள்ளன.

இரண்டு, நான்கு, ஆறு, எட்டு, பத்து, பனிரெண்டு, பதினான்கு, பதினாறு, பதினெட்டு ஆகிய எண்ணிட்ட இயல்கள் (கதைப்பகுதிகள்) அரசியல் சார்ந்த கதைகளாய் (புறம் சார்ந்தவையாய்) உள்ளன. இந்தப் பகுப்பு சங்க இலக்கியங்களில் அகம், அகப்பாட்டு, நெடுந்தொகை நானூறு என்று சிறப்பித்து அழைக்கப்பெறும். அகநானூற்றுப் பாலைத் திணையில் இடம்பெற்றுள்ள பாடல்களையும் புறநானூற்றுப் பாடல்களையும் நினைவில் கொண்டுவந்து நிறுத்துகின்றன. அத்துடன், அப்பாடல்களில் கூறப்படும் புறச்செய்திகளில் குறிப்பாகப் பரணர் மற்றும் மாமூலனாரால் கூறப்படும் அக்காலச் சமூகத்தின் சொல்லப்பாடாத பகுதிகள் போன்று 1960 களில் இருந்து 1985 வரையிலான தமிழகத்தின் இதுவரை சொல்லப்படாத வரலாற்றைப் பற்றிப் பேசுகின்றது இந்த நாவல்.

சங்க இலக்கியங்களில் அழகியலைப் பற்றிப் பேசிச் கொண்டிருந்த புலவர்களின் இடையே அகத்திற்குள் புறக்கருத்துக்களைப் பொதித்துத் தந்த பரணர், மாமூலனார் போன்றோரின் அக்கால முயற்சியை நினைவுபடுத்தும் விதமாகவும் உள்ளது. அத்துடன் காதலில் கால மாறுதலில் ஏற்பட்டுள்ள புதிய பரிமாணங்களையும் பதிவுசெய்யவும் தவறவில்லை. இவையெல்லாம் உருவத்தில் உள்ள முக்கிய அம்சங்களாகும். சங்க இலக்கியச் சாயல்கள் பல இந்நாவலில் இடம்பெற்றுள்ளன. இத்துடன், சங்க இலக்கியத்திற்குப் பிறகு உருவான தொடர்நிலைச் செய்யுளின் உருவ அமைப்புகள் சிலவற்றையும் இந்நாவல் பெற்றுள்ளதை அறியமுடிகின்றது.

**சிலப்பதிகாரத்தின் சாயல்**

இந்த நாவலின் தொடக்கத்திலிருந்து இறுதிவரையில் அதாவது, இயல் ஒன்றிலிருந்து பத்தொன்பது வரையில் தொடர்ந்து இடம்பெறும் அகம் சார்ந்த கதைப் பகுதியில் வின்சென்ட் ராஜா - காந்திமதி என்ற இருவரின் காதல் பற்றிச் சித்தரிக்கப்பட்டுள்ளது. அது, பாலைத் திணையின் உரிபொருளான பிரிவை இன்றைய காலச்சூழலின் பின்புலத்தில் அழகாய்ச் சித்தரிப்பதாய் உள்ளது. அத்துடன், இந்த ஒற்றை இலக்க இயல்களின் இடையில் விசாலாட்சி - செல்வராஜ், சந்தோஷ் - உயர்சாதிபெண், ஹெலன் - கிருபாநிதி ஆகிய மூன்று காதல் கதைகளும் இடம்பெறுகின்றன. அவையும் கதை நடைபெற்றதாகச் சித்தரிக்கப்படும் காலகட்டத்தின் பின்புலத்தில் அமைந்துள்ளன.

இந்தக் காதல் கதைகளை அகம் என்ற தலைப்பில் இயல் ஒன்று, இரண்டு, மூன்று என வரிசைபடுத்தப்பட்டுள்ளன. அத்துடன் இவற்றை 1, 2, 3 என்ற இயல்களாகவும், 1, 3, 5 என்ற ஒற்றை இலக்க இயல்கள் வரிசை முறையிலும், 2, 4, 6 என்ற இரட்டை இலக்க வரிசை முறையிலும் என்ற மூன்றுவிதமான முறையில் வாசிக்கலாம் என்று இந்நாவல் பிரதி வாசிக்க இடம் தரும் பன்முக வாசிப்பு முறை பற்றி நாவலில் சுட்டப்பட்டுள்ளன. என்றாலும், பத்தொன்பது இயல்களையும் தனித்தனியாகவும் அல்லது அகம் அல்லது புறம் என்ற தலைப்பிட்ட இயல்களை அடுத்தடுத்து தொடர்ந்தும் வாசிக்க இயலும். அவ்வாறு இருவித வாசிப்புக்கும் இக்கதைகள் வாசகனுக்கு இடம்தருகின்ற தன்மையில் இவை அமைந்துள்ளன. அதாவது, சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ள 30 காதைகளைத் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் தனித்தனிப் பாட்டுக்காளாக வாசித்த வாசிப்பு முறையை[2] வாசிக்கவும் இந்தப்பிரதி வாசகனுக்கு இடமளிக்கின்றது. சுருங்கக்கூறினால் இந்தப் பிரதி பண்டைய இலக்கிய வடிவங்களான

தனிப்பாடல், தொடர்நிலைச் செய்யுள்கள் என்ற இரு இலக்கிய வகைமையை உரைநடையில் கொடுத்துள்ளது எனலாம். இவை, வெறுமனே உருவத்தில் உள்ள அம்சங்கள்தான். உள்ளடக்கத்தில் புதிய அம்சங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளன. அவற்றில் முதன்மையானதும் முக்கியமானது மானது காதல் கதை.

**நாவலில் இடம்பெற்றுள்ள காதல் கதை(கள்)**

பண்டைத் தமிழரின் காதலானது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற அன்பின் ஐந்திணைகளாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. பிரிதல் பிரிதல் நிமித்தமும் என்ற உரிபொருளில் அமைந்த நீண்ட பாடல்களைக் கொண்ட அகநானூற்றுப் பாலைத் திணைப் பாடல்களை நாவலின் வடிவம் நினைவுபடுத்துகின்றது. பொதுவாக பாலைத் திணைப்பாடல்கள் வினைமேல் அல்லது பொருள் ஈட்ட தலைவன் தலைவியைவிட்டுப் பிரிவதை இயல்பாய்க் கொண்டிருக்கும். அது, சங்க மரபு. ஆனால் அவ்வாறில்லாமல் இந்நாவலில் காதல் பிரிவுக்கு நாவல் உருவான காலகட்டத் தின் சமூகத்தில் நிலவும் மூன்றுவிதமான காரணங்கள் அடையாளம் காட்டப்பட்டுள்ளன.

ஒன்று: இளைஞர்களிடம் தோன்றும் காதல் திருமணத்திற்குப் பின் பிரிதல் (ஒரே சமூக / அந்தஸ்து இருப்பினும் காதல் பற்றிய சமூக உளவியல் நெருக்கடி காரணமாக).

இரண்டு: இளைஞர்களிடம் தோன்றும் காதல் மரணத்தில் முடிதல் (சாதிய / பொருளாதாரப் பின்புலம் உள்ளிட்ட காரணமாக)

மூன்று: இளைஞர்களிடம் தோன்றும் காதல், சமூகம் கொடுக்கும் நெருக்கடிகளால் உள்ளத்திலே உறைந்து போதல் (காதலர்கள் இறுதிவரை இணையாமை).

இவ்வாறான காரணங்களால் காதல் பிரிவுகள் நிகழும் என்று கூறும் அதே வேளை இல்லற இன்பத்தை முழுமையாக அனுபவிக்கும் காதல் பற்றியும் கூறாமல் இல்லை. இதை இரண்டாம் வகையாகக் கொள்ளலாம்.

இளைஞர்களிடம் தோன்றும் காதல் இல்லறம் நோக்கிப் பயணித்தல்.

இவ்வாறு இரண்டு வகையான நான்கு காதல் கதைகளை இந்த நாவல் சொல்லுகின்றது.

இந்நாவலின் மையமாய் அமைவது விசாலாட்சி - செல்வராஜ் காதல். ஒரே விதமான பண்புகள் = ஆசிரியர் பணி + சமமான சமூக அந்தஸ்துகொண்ட இளைஞர்கள். காதலித்து பெற்றோருக்குத் தெரியாமல் திருமணம் செய்து கொள்கிறார்கள். ஒருபுறம் தந்தையின் பாசம், மறுபுறம் காதலனின் பாசம் இவற்றிற்கிடையில் சிக்கித் தவிக்கிறாள் விசாலாட்சி. மகிழ்ச்சியான மனநிலை பெறஇயலாமை. தந்தையின் அன்பு கிடைக்காமை என்ற இரு எதிரெதிர் நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் அவள் ஒரு கட்டத்தில் தற்கொலை செய்து கொள்கிறாள். தந்தையின் மீதான அவளது அதீத அன்பு அவளைத் தாம்பத்தியத்தில் இருந்தும் விலக்கி வைக்கிறது. எப்படியும் நிலைமை சரியாகி விடும் என்ற அவளுடைய நினைப்பு பொய்த்துப் போகிறது. தந்தையின் அன்பு கிடைக்காத ஏக்கத் தில் திருமணமான ஒரு வருடத்திலேயே அவளது மரணம் நிகழ்கிறது.

விசாலாட்சி - செல்வராஜ் காதல் பிரிவுக்கு அவளது தந்தையின் மீது பழியைச் சுமத்த முடியுமா? என்பது கேள்விக்குறி. காரணம் அவர் மகள்மீது அதிகமான அன்பு வைத்திருந்தார் என்பற்கு செல்வராஜ், காந்தியிடம் கூறும் ஒருநாள் நானும் விசாலாட்சியும் எங்கேயோ போனோம். விசாலாட்சி பஸ்சின் முன் கதவுவழி முன்பக்கம் ஏற நான் பின்பக்கம் ஏறினேன். அவளுடன் எங்கள் பள்ளியின் ஒரு டீச்சர்கூட ஏறினாங்க. நான் பின்பக்கம் ஏறியதைப் பார்க்காமல் பஸ்ஸின் நடுவில் ஜன்னலோரமாக அமர்ந்திருந்த உங்கப்பா உடனே தலையில் ஒரு துண்டைப் போட்டு மறைத்தார். நான் பின்பக்கமிருந்து பார்ப்பதை அறியாமல் கூட்டமாயிருந்த பஸ்ஸில் உன் அக்காவைப் பார்க்க அவர் பட்ட பாட்டை நான் பார்த்தேன். பாவம் அவர் எவ்வளவு வாஞ்சை வைத் திருக்கிறாரு என்று நினைத்தபோது எனக்கு வருத்தமாயிருந்தது (ப.337) என்ற உரையாடலும், நாவலில் பல இடங்களில் விசாலாட்சி மீது அவரது தந்தை கொண்டிருந்த அன்பு கூறப்பட்டுள்ளதும், குறிப்பாக அவளது இரண்டாம் மகளான காந்திமதி மற்றும் விசாலாட்சியின் கணவன் செல்வராஜ் இதை நன்கு உணர்ந்திருந்தனர் என்பதும் நாவலில் தெளிவாகக் கூறப் பட்டுள்ளது. உண்மை அப்படியாக இருக்க ஏன் விநாயகமூர்த்தி தன்னுடைய மகளது காதலை ஏற்றுக்கொள்ளவில்லை? என்பது தான் இங்கு பெரிய கேள்வியாக எழுகிறது? மகள் மீதான தந்தையின் அளவற்ற பாசம் வெறுப்பாக மாறுவது? மகளின் காதலை ஏற்க காரணமின்றி மறுப்பது என்பது ஏன் அவருடைய மனநிலையாக உள்ளது. இந்த மனநிலை சமகாலப் பெற்றோரின் காதலுக்கு எதிரான கண்மூடித்தனமான காதல் எதிர்ப்பு மனநிலையைப் பிரதிபலிப்பதாய் அமைகின்றது. இது, சமூகம் பெற்றோர் மனதில் ஏற்படுத்திய காதலர் மற்றும் காதல் பற்றிய சரியான புரிதல் இன்மை என்ற உளவியல் பண்பை வெளிக்காட்டுவதாக உள்ளது.

அடுத்தது சந்தோஷ் - உயர்சாதி பெண்ணின் காதல். பால்ய வயதிலிருந்தே இவர்களுடைய காதல் தொடங்குவதாய் நாவல் சித்தரிக்கிறது. சமூகத்தில் விசக்கிருமி போல் பரவிக்கொண்டுள்ள சாதி என்னும் நோய், கிராமத்தில் ஆதிக்க சக்திகளின் நிழலில் அண்டிப்பிழைக்கும் சந்தோஷின் மரணத்தில் திருப்திகொள்கிறது. இந்தக் காதலின் பின்புத்தில் இரு விசயங்கள் கவனிக்க வேண்டியுள்ளன.

ஒன்று சந்தோஷ் காதலித்த பெண்ணின் பெயர்கூட நாலில் சுட்டப்படவில்லை. இரண்டு அவள் வசதியான உயர் சாதிப்பெண். ஆனால் சந்தோஷின் மரணத் திற்கும் அவனது வீட்டின் அழிவிற்கும் அந்த உயர்சாதியில் பிறந்த வேறொரு ஏழைப்பெண்ணை உலகத்தின் பார்வைக்கு அந்தச் சமூகம் காரணம் காட்டுகின்றது (ப.233). இந்த இரு விசயங்களும் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டியன. இவற்றுடன், உறவினர் யாரும் இல்லாத (அனாதை) வின்சென்ட் ராஜா அனுபவிக்கும் துக்கத்தைக் காட்டிலும் சந்தோஷ் அனுபவிக்கும் பிறப்பு அடிப்படையிலான துக்கம் பெரியதாக உள்ளதாக நாவல் சித்தரிக்கின்றது (ப.225) என்பதும் இணைத்துப் பார்க்க சாதியின் வீரியம் எந்தஅளவிற்கு சமூகத்தில் வலிமையுடன் நிலை கொண்டுள்ளது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறன்றது.

இரட்டை டம்ளர் பழக்கமுள்ள கிராமத்துச் சூழல் நகரத்தை நோக்கி நகரும் பின்னணியில் சந்தோஷ் சாதிவெறியால் கொல்லப்படுவதும். அவனது இறப்புதான் தீண்டத்தகாதோர் பற்றி பொதுப்பிரச்ச

னைக்கு (ப.393) வின்சென்ட் ராஜாவை அழைத்துச் சென்றது என்றாலும், அவனது நினைவில் சந்தோஷ் காதலித்த பெண் உயர்சாதி பெண் என்பதால் அதன்பிறகு கொஞ்ச நாளில் அவள் வேறு ஒருவருடன் திருமணம் செய்து கொண்டிருப்பார் என்று நினைக்கின்றான். ஒரு ஆணாயிருக்கிறதாலேயும், சாதி பற்றிய ஸ்டீரியோடைப் எண்ணம் நமக்கெல்லாம் வந்துவிடறதாலயும் அவ மேல் சாதியகையால சரியா போயிருப்பான்னு ஒரு யூகத்தை ஏற்படுத்திகிட்டு அதையே உண்மையா நினைக்க ஆரம்பித்து விட்டேன் (ப.394) என்று வருந்துவதும் முக்கியமானனவை. ஏனெனில், சந்தோஷ் காதலித்த பெண் பற்றிய எவ்வித குறிப்பும் நாவலில் இல்லாத நிலையில் 25 ஆண்டுகள் கழித்து காந்திமதி, வின்சென்ட் ராஜாவிடம் சந்தோஷின் காதலியை அவனுடைய மரணத்திற்குப் பின் சந்தித்தீர்களா? (393) என்ற கேள்விக்குப் பிறகுதான் அதைப் பற்றி அவன் நினைக்காததைப் பற்றி வருந்துகின்றான். இவ்விருவருடைய இந்த உரையாடல் காதல் பிரிவுக்கு ஒருதலைச் சார்பாய் மட்டுமே சிந்திக்கும் சமுகத்தின் மனநிலையை கேள்வி கேட்பதாய் உள்ளது.

நாவலின் நாயகியாய் வலம்வரும் காந்திமதி மற்றும் நாயகனாய் அறிமுகமாகும் வின்சென்ட் ராஜாவின் காதல் மனத் திற்குள்ளே அடங்கிப் போகின்றது. அதற் குக் காரணம் விசாலாட்சி - செல்வராஜ் காதல் மற்றும் சந்தோஷ் - உயர்சாதி பெண்ணின் காதல். இந்த இரு காதல்களை அவற்றின் முடிவையும் நன்கு அறிந்தவர்கள் காந்திமதியும் வின்சென்ட் ராஜாவும்.

இந்த மாதிரியான காதல் தந்த படிப்பினைதான் இவ்விருவரது காதலையும் தங்களுடைய மனதிற்குளே பூட்டிவைத்து விட்டது. உண்மையான காதல் கண்மூடித்தனமான சமூகத்தின் பார்வையால் ஒளியிழந்து போகிறது என்பதற்கு இவர்களது ஊமைக் காதல் வாழ்க்கையே சாட்சி.

காந்திமதி மரபின்மீது பற்றுள்ளவளாய் இருக்கிறாள். தன்னுடைய அக்கா விசாலாட்சியின் மரணம், தன்னுடைய பெற்றோரின் மனநிலை மற்றும் தான் வாசித்த இலக்கியங்கள் குறிப்பாகப் பெண்களைத் தியாகிகளாய்ச் சித்திரிக்கும் சமகால நாவல்கள், அவளது காதலை மனதில் சிறைவைத்து விடுகின்றன. அதே வேளை அவளைக் காதலிக்கும் வின்சென்ட் ராஜா எதிர்காலம் பற்றிய தெளிவான மனநிலை உடையவனாய் இருக்கிறான். என்றாலும், தன்னுடைய அறை நண்பன் சந்தோஷின் துயரமான மரணம் மற்றும் தன்னுடைய வாழ்வில் நடந்த சில கசப்பான அனுபவங்கள் அவனது எதிர்காலத்தை பற்றற்றதாய் மாற்றுகின்றன. 25 ஆண்டு காலத்திற்குப் பிறகு சந்திக்கும் அவ்விருவரும் வாழ்க்கை முறை, பொருளாதாரத் தன்னிறைவு, சமூக கட்டமைப்பில் இருந்து விலகியிலுத்தல் எனப் பல படிநிலைகளில் மாற்றங்களைச் சந்தித்திருந்தாலும், உணர்வில் ஊறிய பண்புகள் தம்முடைய காதலை நினைவுகளாய் நெஞ்சில் மட்டுமே சுமக்க வழிவகுக்கின்றது. தம்முடைய காதலை இருவரும் கடைசி வரை வெளிப்படுத்த முன்வரவே இல்லை.

இந்நாவலில் பிரிவு நிலையில் அமையும் இந்த முக்கோண காரணங்கள் (விசாலாட்சி - செல்வராஜ், சந்தோஷ் - உயர் சாதிப்பெண், வின்சென்ட் ராஜா - காந்திமதி) 1964 - இல் தொடங்கி சுமார் 25 (சந்தோஷின் பால்யம் சேர்க்க 10 கூடுதலாய் கொள்ளலாம்) ஆண்டுகால தமிழ் நிலத்தில் வெளிப்படும் காதல் பற்றிய சிந்தனையின் பிரதிகளாய் அமைகின்றன

என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என்றே நினைக்கத் தோன்றுகின்றது.

அடுத்ததாக கிருபாநிதி - ஹெலன் காதல். இவ்விருவரது காதல் பின்புலம் மேற்கண்ட பிரிவு காதல்களில் இருந்து முற்றிலும் மாறுபட்டு அமைந்துள்ளது கவனிக்கத்தக்கது. பிறரைப் பற்றிய சிந்தனைகள் ஏதுமற்றவர்களாய் கிருபாநிதி - ஹெலன் விளங்குகின்றனர். இவ்விருவரில் கிருபாநிதி வசதியான வீட்டில் விரும்பிய வாழ்வை வாழும் சுதந்தர பறவையாய் வாழத்துடிப்பவன்; எதிர்காலம் பற்றியோ மற்றவர்களுடைய மனம் பற்றியோ சிந்திக்கும் சிந்தனையற்றவன்; தன்னுடைய மகிழ்ச்சி பற்றி மட்டுமே அக்கறை கொள்பவன். அவனுக்குச் சற்றும் சளைத்தவள் அல்ல என்பது போல வாழ்பவள் ஹெலன். அவள் மரபு பற்றிய சிந்தனை ஏதுமற்ற நகர வாழ்வை வாழ்பவள். எதிர் காலம் பற்றிய கவலையோ அல்லது கடந்த காலத்தின் சமூக வரலாற்று பிரக்ஞையோ அவளுக்கு இல்லை. தான் வாழும் காலம்வரை மகிழ்ச்சியாக வாழ்ந்து விட வேண்டும் என்ற எண்ணம்கொண்ட நகரப் பண்புகளை உள்வாங்கிய இளம்பெண். ஒத்த பண்புகளைக் கொண்ட இவ்விருவருடைய காதல் திருமணத் தில் முடிகின்றது. இந்த இருவிதமான காதல் கதைகள் நமக்கு ஓர் உண்மையை உணர்த்துகின்றன. காதலுக்கும் சமூகம் பிரதிபலிக்கும் உளவியலுக்கும் இடையில் உள்ள வலிமையான தொடர்புதான் அது.

நாவலில் சுட்டப்படும் செய்திகளில் இருந்து,

பெற்றோர் பிள்ளைகள்மீது கொள்ளும் அளவற்ற அன்பு (உளவியல்)

பிள்ளைகள் பெற்றோர்மீது கொள்ளும் அளவற்ற அன்பு (உளவியல்)

ஜாதி / பொருளாதாரப் பின்புலம் கொண்ட அதிகார வர்க்கம்

ஆகியன காதல் பிரிவுகளுக்கு முக்கியமானக் காரணங்களாய் அமைகின்றன என்பதை உணர முடிகின்றன. என்றாலும், சூழல் என்பது காதலுக்கு வில்லனாகவோ அல்லது நண்பனாகவோ அமைந்து முடிவினைத் தீர்மானிக்கும் சக்தியாய் விளங்குகிறது என்ற உண்மையையும் மறுப்பதற்கில்லை. நாவலில் இடம்பெற்றுள்ள நான்குவிதமான காதல் கதைகளும் இதை உணர்த்த மறக்கவில்லை. இவற்றையெல்லாம் நோக்க இருக்கிற சூழலுக்கு ஏற்ப வாழப் பழகிக்கொள்ளும் உள்ளம் கொண்டவர்களின் பின்புலத்தில் உருவாகும் காதல் வெற்றிபெறுகிறது என்ற உண்மையை இந்நாவல் ஏற்படுத்துகிறது என்று உறுதியாக நம்பலாம்.

## சங்க அகமரபின் வளர் நிலை

சங்க அகமரபில் தலைவன் X தலைவியின் உள்ளத்தில் தோன்றும் காதல் மேலும் வளரவும், அடுத்த கட்டமான திருமணம் என்ற குடும்ப அமைப்பிற்குள் நுழையவும் மிகவும் துணைபுரிபவர்களாக விளங்குபவர்களாகப் பாங்கன், தோழி என்ற பாத்திரங்கள் சுட்டப்படுகின்றன. இவ்வாறான சங்க மரபின் தொடர்ச்சி / வளர்ச்சி இக்காலத்தில் (நாவலின் காலம் / இலக்கிய வகைமை) எவ்வாறு மாற்றமடைந்துள்ளன என்பதைப் பிரதிபலிக்கின்றது.

அதாவது, காதலர்களுக்கிடையில் காதல் அரும்புதல். அவ்வாறு உருவாகும் காதலை வளர்க்கும் இடந்தலைப்பாடு என்பன சங்க இலக்கியங்களில் பார்க்கக்கூடிய அம்சங்கள். ஆனால் காதலை வளர்க்கத் துணைநிற்கும் தோழன், தோழியிடையே காதல் உருவாவது என்ற புதிய அம்சம் இந்நாவலில் இடம்பெற்றுள்ளது. அதாவது, காதல் அரும்புதல் + இடந்தலைப்பாடு = தோழன் x தோழி காதல் என்ற நிலையில்

புதிய காதல் கதைகள் இந்நாவலில் உருவாக்கப்பட்டுள்ளன. இவை இந்நாவலில் படிப்படியாகப் பின்வருமாறு வளர்வாய் அமைந்துள்ளன.

இயல் ஒன்று: காதல் உருவாதல்.
இயல் மூன்று: இடந்தலைப்பாடு.
இயல்: ஐந்து, எழு ... தோழன் x தோழியிடை மலரும் காதல்.

காதல் + இடந்தலைப்பாடு: கோயம்புத்தூர் ரயில் நிலையத்தில் தொடங்கும் முதல் இயலில் வின்சண்ட் ராஜா கல்லூரி மாணவனாக அறிமுகமாகிறான். தான் எழுதிய கவிதைக்குக் கிடைத்த பரிசை வாங்க திருநெல்வேலியில் இருந்து கோவைக்கு வரும் அவன் கூச்சசுபாவம் உள்ளவனாக இருக்கிறான். அதே கல்லூரியில் பரிசுபெற வரும் காந்திமதி மரபினைத் தொடரும் கிராமத்துப் பெண்.

இருவரும் ரயில் நிலையத்தில் இயற்கையாய் ஒருவரையொருவர் சந்திக்கின்றனர். இருவரும் இரவு ரயில் பணம் மேற்கொள்ளுகின்றனர். இரயில் பயணத்தில் இருவரும் ஒருவர் கால் மற்றவர் மீது படாமல் கவனமாய் அமர்ந்து (பக்.12) பயணிக்கின்றனர். அவர்களின் பயணித் தின்போது காந்திமதியைப் பார்த்து சக பயணியான ஒரு பாட்டி நல்ல பிள்ளேம்மா எவ்வளவு அடக்கமா வந்த. நானும் பார்த்துக் கிட்டுதான் வந்தேன். ஒனக்கு உள்ள ஒரு சக்தி இருக்கும்மா. மகராசி. கெழவி சொல்றேன்னு பார்க்காதே. உனக்குள்ள ஒரு சக்தி குடிகொண்டிருக்கு. உன் முகம் வழி தெரியுது. தெய்வத்தன்மை அது (ப.18) என்று பெண்ணுக்குரிய பண்புகள் கொண்டவளாய்ச் சித்திரித்துக் கொண்டிருக்கும் தருணத்தில் ஸ்டேஷன் வரப் பிரிந்து செல்லுகின்றனர்.

அதன்பிறகு அவளை ஒருமாதம் கழித்துப் பேருந்து நிலையத்தில் சந்திக்கிறான். அப்போது பத்திரிக்கையில் வந்திருந்த அவனுடைய கவிதையைப் பார்த்து மகிழ்ச்சியடையும் அவள் அந்தச் செய்தியை அவனுக்குத் தெரியப் படுத்தும் விதமாய் அந்தப் பத்திரிக்கையை அவனிடம் அவன் விரல்களில் தன் விரல்கள் படாமல் கவனமாய்க் கொடுத்தாள். அவனும் அப்படியே வாங்கினான் (பக்.22) முதல் சந்திப்பின் பிரிவில் எப்பப் பார்க்கலாம் என்று தயக்கத்துடன் கேட்டவனுக்கு, மன்னிக்கனும், நான் யாரையும் ஒருமுறை சந்தித்தால் அடுத்து எப்போது சந்திப்ப என்றெல்லாம் பேசறதில்லை வரட்டுமா? என்று போனவள், இரண்டாவது சந்திப்பின் பிரிவில் சரி, புறப்படுவோம். சாட்டர்டே அப்புறம் சண்டே எங்களுக்கு விசிடர்ஸ் அலௌ பண்ணுவாங்க, வாங்க என்று அவன் ஏதும் கேட்காத நிலையில் அவளே முன் வந்து சந்திக்கும் இடம் பற்றிக் கூறுகிறாள்.

இந்த நிகழ்வுகள், காதலுக்குமுன் அரும்பும் கைக்கிளை அதனைத் தொடர்ந்து உருவாகும் இருவரது உள்ளத்திலும் தோன்றும் காதல் மற்றும் அதன் பிறகான சந்திக்கும் இடம் (இடந்தலைப்பாடு) என்ற சங்க மரபுகளின் சாயலைத் தற்காலச் சூழலில் நாவல் பிரதிபலிப்பதாக உள்ளது. சங்க காதல் வெளிப்பாடான புணர்தல் என்பது நாவலில் கைதொடாமல் பழகுவது என்ற சமகால (நாவல் சித்தரிக்கும் காலம்) திரைப்படங்களில் காட்டப்பட்ட காதல் காட்சிகளை நாவல் பிரதிபலிக்கின்றது என யூகிக்கலாம். அத்துடன், சந்திக்கக் கூறிய இடத்திற்குக் காந்திமதியைப் பார்க்கப் புறப்படும்போது வின்சென்ட் ராஜா வழக்கத்திற்கு மாறாகப் புதியதாக வாங்கிய ஸிலிப்ரை அணிந்து கொண்டு செல்லுதல், சட்டைபையின் கைகளை மடித்துவிடுதல் (ப.32) போன்றனவும் அவன் வருவான் (வின்சென்ட் ராஜா)

என்று நினைத்து காந்திமதி, விடுதியின் முன் வெட்கத்துடன் காத்திருத்தல், அதனைத் தொடர்ந்து அவளைப் பிரிந்து வரும்போது அப்போது வெளியான திரைப்படங்களில் காட்டப்படும் கதாநாயகர்கள் போல் தான் இருப்பதாக வின்சென்ட் ராஜா கற்பனையில் மிதத்தல் ஆகியன மேற்க ண்டவற்றின் தளத்தில் கதை நகர்வதைத் தெளிவாக உணர்த்துகின்றன.

இந்தப் பார்வையில் கதையயைப் பார்க்க இயல் 1 காதலின் முதல் நிலையான காட்சி, ஐயம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கின்றன. இயல் 3 இடந்தலைப்பாடு என்ற சங்க மரபின் தற்கால சூழலைப் பிரதிபலிக்கிறது எனலாம்.

தோழன் தோழி காதல்: காதல் என்றவுடன் தமிழர் நினைவில் தலைவன் தலைவி என்ற இரு பிம்பங்கள் தோன்றும். இது இரண்டாயிரம் ஆண்டுகால இலக்கிய மரபு நம் நெஞ்சில் விதைத்துள்ள விதை. தலைவனுக்கு ஒரு தோழன் இருக்கிறான். அதுபோல் தலைவிக்கு ஒரு தோழி இருக்கிறாள் அவர்கள் வேலை, தலைவன் தலைவியின் காதல் கைகூட உடன் இருத்தல். இவ்வாறுதான் நமக்குப் பொது வாகச் சங்கஇலக்கியங்கள் செய்திகளைச் சொல்லுகின்றன. தலைவனுடைய தோழனுக்கும் அதுபோல் தலைவியின் தோழிக்கும்கூட மனம் என்ற ஒன்று இருக்கும்தானே? அதிலும் காதல் என்ற விதை விருட்சமாய் வளரும் தானே? என்ற எண்ணம், சங்க இலக்கியங்களை வாசித்தவர்கள் நிச்சயம் நினைத்திருக்கக்கூடும். அப்படி வாசித்தவர்களின் அகப்பார்வையில் உருவான பிம்பங்களின் பிரதியாய் இந்நாவலில் ஒரு காதல் அமைந்துள்ளது. அதுதான் கிருபாநிதி - ஹெலன் காதல்.

நாவலின் ஐந்தாம் இயலைச் சங்க அகமரபின் பின்புலத்தில் வாசித்தால் கைக்கிளை - காதல் -இடந்தலைப்பாடு என்ற வரிசை முடிந்தபின்னர் நிகழும் இடந்தலைப்பாட்டின் நீட்சியில் வின்சென்ட் ராஜாவின் நண்பனாக கிருபாநிதி மற்றும் காந்திமதியின் தோழியான ஹெலன் ஆகிய இருவரது காதல் கதை உருவாவதை அறியலாம். வின்சென்ட் ராஜா - காந்திமதி போல் அன்றி, ஏற்கனவே பழகியவர்கள் போல் நடந்துகொள்ளுதல், நிகழ்காலத்தின் மீது மட்டுமே அக்கறைகொண்டவர்களாக இருத்தல் எனப் பல பொருத்தமுடைய பண்புகளுடன் இருக்கும் அவர்களிடையே ஏற்படும் காதல், பல்வேறு பிரச்சனைகளைக் கடந்து திருமணத்தை நோக்கி நகர்கின்றது. இவ்வாறு நான்கு மாறுபட்ட காதலைச் சொல்லும் இந்நாவல் இக்காதல் கதைகளினூடாகப் பல சமூக மறைபகுதிகளயும் இடையிடையே கூறிச் செல்கின்றது.

அகப்புற அரசியல்

இந்நாவலில் இடம்பெற்றுள்ள காதல் கதைகளின் பின்புலத்தில் நாவல் இயங்கும் காலகட்டத்தின் வரலாற்றின் மறைபகுதிகள் பல வெளிப்படுகின்றன என்றாலும், கட்டுரைக்கான அளவு கருதி அவற்றில் முக்கிய அமசங்களான பின்வரும் மூன்றினை நாம் வரிசைப்படுத்தலாம். அவை, சமூகத்தில் நிலவும் ஜாதியம் சார்ந்த சிந்தனைகள்,

இந்தி எதிர்ப்புப் போராட்டம் சமுதாயத் தின் உளவியல் என்பனவாகும். இவற்றில் சாதியம் சார்ந்த சிந்தனைகள் என்பதில் முதலில் பார்க்கவேண்டியது சந்தோஷ் என்பவனைச் சுற்றி இயங்கும் ஆதிக்கச் சிந்தனையாளர்களின் அடக்குமுறைகள். அதாவது இரட்டைக்குவளைமுறை முதலிய சமூக ஏற்றத்தாழ்வுகள் பற்றிப் பேசும் இந்நாவலில் சொல்லப்பட்டுள்ள இரண்டு விசயங்கள் மிகமுக்கியமானதாகப்படுகின்றன.

அவை, நெருப்புப் பற்றிய வேத கால ரிச்சுவல் இம்பார்டன்ஸ் பத்தி நான் பின்னாடிதான் டெல்லியில் ஜே என் யூ வில் வைத்துத் தெரிந்துகொண்டேன். ஆனா முன்னாலேயே தென்னிந்திய கிராமம் ஒன்றில் அதைச் செயல்படுத்தி இருந்தாங்க (சந்தேஷ் குடிசையுடன் தீவைத்துக் கொன்றமை) (ப.389) என்று வின்சென்ட் ராஜாவின் மனதில் இருந்து ஒலிப்பது. இன்னொன்று, சந்தோஷ் கட்டணச் சலுகைபெற தன்னுடைய சாதிப் பெயரைக் கூறத் தயங்குதல் ஆகியனவாகும். இந்த இரண்டும் சுமார் இருபத்தைந்து ஆண்டு கால ஆதிக்கச் சமூகத்தின் ஒடுக்குமுறைகளையும் அவற்றின் விளைவுகளையும் நன்கு உணர்த்துகின்றன.

அடுத்து, இந்தி எதிர்ப்புப் போராட்டம். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் தீவிரம் எவ்வாறு தமிழகத்தில் தலைதூக்கி இருந்தது என்பது பற்றி விரிவாக (பக்.248-256) கூறப்பட்டுள்ளது. இந்நாவலில் சுட்டப்படும் காதாபத்திரங்களில் ஒன்றுகூட அந்தப் போராட்டத்தில் பங்குகொண்டதாகக் கூறப்படவில்லை என்பது கவனிக்கவேண்டிய அம்சமாகப் படுகின்றது. அத்துடன், போகிற போக்கில் நாவலின் இடைப்பகுதியில் (இடைசெருகல் போல) இடம்பெறும் இந்த நகழ்வுடன் தொடர்புடையவர்களாக காந்திமதி - வின்சென்ட் ராஜா இருந்தாலும், அவர்கள் அந்தப் போராட்டத்தில் இருந்து தப்பித்து வீட்டிற்குச் செல்வதாகவே சொல்லப்படுகின்றது. மேலும், கலவரத்தினர் பெரும்பாலும் இளைஞர்களாகவும், மாணவர்களாகவும் இருந்தனர் என்றாலும், காதல் கதைகளில் இடம்பெற்றுள்ள ஒருவரும் அவருடைய கல்லூரி மாணவர்களும் இடம்பெற்றதாகக் கூறப்படவில்லை. ஆனால் அதேநேரம் கலவரம் சிறு குறு கிராமங்கள் வரை பரவலாக வியாபித்திருந்ததாக் கூறப் பட்டுள்ளது, கவனிக்கத்தக்கது.

சமுதாயத்தின் பொதுப்புத்தியில் நிலவும் உளவியலை இந்நாவல் சுட்டிக் காட்டுகின்றது. காதல் மீதான சமூகப்பொதுப் புத்தி கொண்டுள்ள தவறான பார்வை ஏற்படுத்திய தாக்கம் காரணமாக காரணமே இல்லாமல் அளவிற்கு அதிகமாக அன்பு வைத்துள்ள மகள் மீது தீராப் பகை கொள்ளுதல், தன்னுடைய சாதிப் பெயரை உறக்கச் சொல்லத் தயக்கம் கொள்ளும் மாணவச் சமூகம், இந்தி எதிர்ப்புப் பேராட்டம் தீவிரம் கொண்டுள்ள சூழலில் தன்னுடைய காதலியுடன் இருந்தால் போதும் என்று நினைத்த காதலர்கள் என இவை நீளுகின்றன.

மக்களின் பல்வேறு தனிமனித மனநிலைகள், இந்தி எதிர்ப்புபோராட்டம், அரசியல், அரசியல் செயல்பாடுகளுக்கு அப்பால் இருத்தல் உள்ளிட்ட பல விசயங்களைப் பற்றிப் பேசுகின்றது, இந்த நாவல் பிரதி.

## குறிப்பு விளக்கம்

1. குறுந்தொகை, பாடல். 8:4-6
2. மீனாட்சி சுந்தரனார்.தெ.பொ., சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியம், ப.17 மற்றும் ப.28.
3. தொல்காப்பியம் பொருளதிகாரம் (உரைவளம்) அகத்திணையியல் நூ.16.

## துணை நூற்பட்டியல்

1. சிவலிங்கனார், ஆ (பதிப்)., தொல்காப்பியம் பொருளதிகாரம் (உரைவளம்) அகத்திணையியல், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
2. செயபால், முனைவர் இரா (உ.ஆ)., அகநானூறு முலமும் உரையும், 2004, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.

3. தமிழவன், ஆடிப்பாவை போல, 2017, எதிர்வெளியீடு, பொள்ளாட்சி.
4. நாகராசன், முனைவர் வி (உ. ஆ)., குறுந்தொகை மூலமும் உரையும், 2004, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.
5. மீனாட்சி சுந்தரனார், தெ.பொ., சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியம், 2005, காவ்யா, சென்னை.